**கவனிக்க.-** *2016.04.22 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1965 - 2016 අප්‍රේල් මස 29 වැනි සිකුරාදා - 2016.04.29**

*1965 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 916 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** நிடா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2016, மாச்சு மாதம் 11 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, மே மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மே மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## ஊவா மாகாண அரசாங்க சேவையில் நெசவுத்தொழில் போதனாசிரியர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2016

ஊவா மாகாண அரசாங்க சேவையின் நெசவு போதனாசிரியர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவுள்ள பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.05.25 ஆகும்.

**ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம்**.- நெசவுத்தொழில் போதனாசிரியர் தரம் III

**சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்)** .- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் அட்டவணை இல. 1 க்கு அமைய MN 1-2006 - ரூபா 27,140 - 10 × 300 - 11 × 350 - 10 × 495 - 10 × 660 - ரூபா 45,540 சம்பள அளவுத்திட்டம் ஆகும். அச்சுற்றுநிருபத்தின் அட்டவணை இல. II க்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

**2. ஆட்சேர்ப்புக்குரிய பொதுத் தகைமைகள் :**

(அ) விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) ஊவா மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உள ஆரோக்கியமுள்ளவர்களாகவும் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு ஆகக்குறைந்தது உடன் முன்னரான 3 வருடங்கள் தொடர்ச்சியாக ஊவா மாகாணத்தில் வதிவு உள்ளவராக இருத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் உரிய படிவத்தில் வதிவை உறுதிசெய்தல் வேண்டும்.

(ஈ) இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையென இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(உ) **வயது**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**3. கல்வித் தகைமைகள் :**

(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலம், கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடத்தில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(இ) நெசவுத் திணைக்களத்தின் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறியை பூர்த்திசெய்து இறுதிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**4. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:**

(அ) இப்பதவி நிரந்தமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

(ஆ) நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஊவா மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

(இ) பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007 இன் பிரகாரம் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய மட்டத்தில் அரசகரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5. ஆட்சேர்க்கும் முறை.-**

* வெற்றிடங்களில் 40% வெளிவாரி விண்ணப்பதாரர்கள் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.
* வெற்றிடங்களை விட எண்ணிக்கையில் கூடிய முறையான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்து திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் திறமை ஒழுங்கின் முன்னுரிமைக்கு ஏற்ப தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். வெற்றிடங்களை விட எண்ணிக்கையில் குறைந்த முறையான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்து திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்படாமல் தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையின் மூலம் மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

*6. **விண்ணப்பிக்கும் முறை**:- இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 அளவிலான காகிதத்தில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். 1 தொடக்கம் 4 வரையிலான தகவல்களை முதல் பக்கத்திலும் 5 தொடக்கம் 8 வரையிலான தகவல்களை இரண்டாம் பக்கத்திலும் அதன் பின்னர் வரும் தகவல்களை மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்படிவத்தை தானே தயாரித்துக்கொள்ளல் வேண்டும். அந்தந்த தலைப்புக்களில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழியிலேயே விண்ணப்பத்தை பூரணப்படுத்தல் வேண்டும். தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் தலைப்புக்கள் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.*

- *தாங்கள் உள்ளடங்கும் மாவட்டம் ''பதுளை'' அல்லது ''மொனராகலை'' என்பதை விண்ணப்பத்தில் A இல் தெளிவாக குறிப்பிடவும்.*
- *தாங்கள் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலத்தையும் அதற்கு ஏற்புடைய இலக்கத்தையும் விண்ணப்பத்தில் B இல் தெளிவாக குறிப்பிடவும்.*
- *முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயரை ஆங்கில பெரிய எழுத்துக்களில் குறிப்பிடுக.*
- *உதாரணம் :- PERERA A. B. C. (இங்கு Mr./ Mrs./ Miss ஆகியவற்றில் ஏற்புடையதாகாத சொற்களை வெட்டிவிடவும்.*

*பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2016.05.25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு ''செயலாளர், ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, இல. 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்அராவை, பதுளை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பவும். விண்ணப்பங்கள் கிடைக்கபெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''ஊவா மாகாண அசராங்க சேவையில் நெசவுத் தொழில் போதனாசிரியர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2016'' என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். தற்போது அரச/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பதவியிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.*

*7. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**:- விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் /பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் ஒரு அதிகாரி/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் 2,30,700 ரூபா அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.*

*8. **பரீட்சை மற்றும் நிர்வாக செலவுகள்**.- பரீட்சைக் கட்டணம் மற்றும் நிர்வாக செலவு 400 ரூபா ஆகும். இந்த தொகையை ஊவா மாகாண பிரதம செயலாளரின் வருமானத் தலைப்பு 20.03.02.13 க்கு வரவு வைத்து ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் கட்டாயமானதாகும். எதிர்கால தேவைக்கு பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்களோ அல்லது காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எத்தகைய காரணத்தைக்கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்திற்கொள்க.*

*9. போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் ஏற்புடைய பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சையின்போது தேவையான தகைமைகளைப் பெற்றிருக்காதது தெரியவருமிடத்து அவர் நியமனம் வழங்குவதற்கு தகுதியற்றவராக கருதப்படுவார்.*

*10. திறந்த போட்டிப் பரீட்சை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவினால் நடாத்தப்படும். போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் முழுப் பரீட்சைக்கும் தனது விருப்பத்திற்கமைய ஒரு மொழிமூலம் மாத்திரமே தோற்ற முடியும். விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் ஊடகமொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.*

*11. பரீட்சை நடைபெறும் தினத்தன்று விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகிய ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த ஆவணங்கள் தவிர்ந்த பிற எத்தகைய ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*12. **போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம்**.- எழுத்துமூலப் பரீட்சை 2 வினாப் பத்திரங்களைக் கொண்டுள்ளது. விண்ணப்பதாரியின் கடமை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தகைமைகள் மற்றும் ஆற்றல்கள் என்பவற்றை பரீட்சிப்பதற்காக இவ்வினாப் பத்திரங்கள் தயாரிக்கப்படும்.*

| வினாப்பத்திரம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியெய்தும் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 உளச்சார்பு | ஒரு மணித்தியாலம் | 100 | 40% |
| 2 பொது அறிவு | ஒரு மணித்தியாலம் | 100 | 40% |

***உளச்சார்பு*** - இவ்வினாப் பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரரின் மொழியாற்றல், கணக்குத் திறன் என்பன மதிப்பீடு செய்யப்படும்.

***பொது அறிவு*** - சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான தகவல்களை உள்ளடக்கிய வினாப்பத்திரமாகும்.

13. **பிழையான தகவல்கள் வழங்குதல்.**- இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு எவரேனுமொரு பரீட்சார்த்திக்கு தகைமை இல்லையென தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறுகின்ற போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலாயினும் அவரது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என்றோ அல்லது அறிந்துகொண்டே பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளார் என்றோ அல்லது சரியான தகவலொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என்றோ தெரியவருமாயின் அவரது சேவை முன் அறிவித்தல் ஏதுமின்றி முடிவுறுத்தப்படும்.

14. இந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்/ஆட்சேர்ப்பு செய்யாதிருத்தல் அல்லது நிலவும் வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றியோ அல்லது இது பற்றிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது. அவ்வாறே இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தும் /தீர்மானிக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது.

ஆர். எம். ரீ. பீ. ஹாதியல்தெனிய
செயலாளர்,
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
பதுளை,
2016, ஏப்பிறல் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஊவா மாகாண அரசாங்க சேவையில் நெசவுத்தொழில் போதனாசிரியர் பதவிக்கு ஆட்சேர்த்தல்- 2016**

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

A. தாங்கள் உள்ளடங்குகின்ற மாவட்டத்தை குறிப்பிடுக.
(பதுளை - 01/மொனராகலை - 02)

| | |
|---|---|
| | |

B. மொழி மூலம் (சிங்களம் - 01/தமிழ் - 02)

| | |
|---|---|
| | |

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Rev./Mr./Mrs./Miss
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :-----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்) :-----.
2.3 தொலைபேசி இலக்கம் :-----.

3. 3.1 பால்நிலை : பெண் - 1/ஆண் - 0

| |
|---|
| |

3.2 பிறந்த திகதி : வருடம்

| | | | |
|---|---|---|---|
| | | | |

மாதம்

| | |
|---|---|
| | |

திகதி

| | |
|---|---|
| | |

3.3 2016.05.25 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள்

| | |
|---|---|
| | |

மாதங்கள்

| | |
|---|---|
| | |

நாட்கள்

| | |
|---|---|
| | |

3.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

04. 4.1 2016.05.25 ஆந் திகதிக்கு ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவு

வருடங்கள் | | | | | மாதங்கள் | | | நாட்கள் | | |

4.2 உரிய மாவட்டத்தில் எப்போதிருந்து வசிக்கின்றீர்கள்:-----.

4.3 வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு :-----.

4.4 வசிக்கும் கிராம அலுவலர் பிரிவு :-----.

05. **கல்வித் தகைமைகள்** :-

5.1 க.பொ.த. (சாதா/தரம்) பரீட்சை:-----.

1. வருடம் :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

5.2 க.பொ.த (உயர் /தரம்) பரீட்சை

1. வருடம் :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

5.3 தொழிற் தகைமைகள் :-----.

5.3.1 பாடநெறியின் பெயர் :-----.

5.3.2 பெற்றுக்கொண்ட நிறுவனம் :-----.

5.3.3 சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :-----.

6. விண்ணப்பதாரி தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தொழில் புரிபவராயின் தொழில் புரியும் திணைக்களத்தின் பெயரும் முகவரியும் :-----.

7. பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரங்கள்: -

7.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் :-----.

7.2 பற்றுச்சீட்டு இலக்கமும் செலுத்திய திகதியும் :-----.

7.3 செலுத்திய தொகை :-----.

| |
|---|
| பற்றுச்சீட்டைக் கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடியது.) |

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** : -

(i) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யப்படாமையினாலும் மற்றும் அல்லது பிழையாகப்

பூர்த்திசெய்திருப்பதனால் ஏற்படும் பாதிப்பை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகிறேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள இவ் உறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன்னராயின் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின்னராயின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**:-

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற ....................................................................................... எனும் முகவரியில் வசிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் .......................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

10. **திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**: -

(தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

மேற்படி தகவல்களைக் கொண்ட திரு./திருமதி/செல்வி ................................................................................................ அமைச்சில்/ திணைக்களத்தில் /அலுவலகத்தில் ............................ ஆந் திகதி முதல் ............................ பதவியில் பணியாற்றி வருகிறார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எதிர்காலத்தில் அவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்படவில்லை என்றும், பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

திணைக்களத் தலைவரின் முழுப் பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

4-1026/1

## ஊவா மாகாண இறைவரித் திணைக்களத்தின் வகுப்பு III தரம் II இல் வரி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பம் கோரல் - 2016

ஊவா மாகாண இறைவரித் திணைக்களத்தின் வரி உத்தியோகத்தர் வகுப்பு III தரம் II பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவுள்ள பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.05.25 ஆகும்.

**ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம்.**- வரி உத்தியோகத்தர் வகுப்பு III தரம் II

**சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்)** :- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் MN 5-2006 இன் அட்டவணை இல. 1 க்கு அமைய - ரூபா 34,605 - 10 × 660 - 11 × 755 - 6 × 240 - 15 × 930 - 63,460/- சம்பள அளவுத்திட்டம் ஆகும். அச்சுற்றுநிரூபத்தின் அட்டவணை இல. II க்கு அமைய அடிப்படைச் சம்பளம் ரூபா 20,297 மற்றும் சீராக்கப்படி 9,767 உரித்தாகும்.

02. **ஆட்சேர்ப்பதற்குரிய பொதுத் தகைமைகள்** :-

(அ) விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) சகல விண்ணப்பதாரர்களும் ஊவா மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடியவர்களாகவும் பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய போதிய உடல், உள ஆரோக்கியமுள்ளவர்களாகவும் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு ஆகக்குறைந்தது உடன் முன்னரான 3 வருடங்கள் தொடர்ச்சியாக ஊவா மாகாணத்தில் வதிவு உள்ளவராக இருத்தல் வேண்டும். பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நேர்முகப் பரீட்சையின் போது உரிய படிவத்தில் வதிவை உறுதிசெய்தல் வேண்டும்.

(ஈ) இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தேவையென இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(உ) **வயது**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

3. **கல்வித் தகைமைகள்**:

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றிலிருந்து பட்டம் பெற்றவராக இருத்தல் அல்லது

(ஆ) பட்டய கணக்காளர்களுக்கான இடைநிலைப் பரீட்சை அல்லது

(இ) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கீடு அல்லது வணிகக் கல்வி பற்றிய டிப்ளோமா பாடநெறியில் இடைநிலைப் பரீட்சை அல்லது

(ஈ) செலவீடு மற்றும் முகாமைத்துவ கணக்கீட்டு நிறுவனத்தில் (ஐ. சீ. எம். ஏ. - ஐக்கிய இராச்சியம்) I, II மற்றும் III ஆகிய பகுதிகள் அல்லது/அத்தாட்சிப்படுத்தப்பட்ட மற்றும் ஒன்றிணைந்த கணக்காளர் சங்கத்தின் (ஏ. சீ. சீ. ஏ. - ஐக்கிய இராச்சியம்) I, II மற்றும் III ஆகிய பகுதிகள் அல்லது அதற்கு சமமான கணக்கியல் பற்றிய தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**:

(அ) இப்பதவி நிரந்தமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். 3 வருட தகுதி காலப்பகுதிக்கு உட்பட்டது.

(ஆ) தகுதிகூர்நிலை காலத்தின் இறுதியில் பதவியில் நிரந்தரமாக்குவதற்கு 3 வருடங்களின் இறுதியில் நடாத்தப்படும் தகுதிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். அந்த தகுதிப் பரீட்சையில் சித்தியடைய தவறும் உத்தியோத்தர்களது நியமனம் முடிவுறுத்தப்படும்.

(இ) நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஊவா மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

(ஈ) பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007 இன் பிரகாரம் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய மட்டத்தில் அரசகரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. **ஆட்சேர்க்கும் முறை**:

வெற்றிடங்களை விட எண்ணிக்கையில் கூடிய முறையான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்து திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் திறமை ஒழுங்கின் முன்னுரிமைக்கு ஏற்ப தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். வெற்றிடங்களை விட எண்ணிக்கையில் குறைந்த முறையான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமிடத்து திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்படாமல் தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையின் மூலம் மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

6. **விண்ணப்பிக்கும் முறை**:- இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 அளவிலான காகிதத்தில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தமது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். 1 தொடக்கம் 4 வரையிலான தகவல்களை முதல் பக்கத்திலும் 5 தொடக்கம் 8 வரையிலான தகவல்களை இரண்டாம் பக்கத்திலும் அதன் பின்னர் வரும் தகவல்களை மூன்றாம் பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பப்படிவத்தை தானே தயாரித்துக்கொள்ளல் வேண்டும். அந்தந்த தலைப்புக்களில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழியிலேயே விண்ணப்பத்தை பூரணப்படுத்தல் வேண்டும். தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் தலைப்புக்கள் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

- * தாங்கள் உள்ளடங்கும் மாவட்டம் ''பதுளை'' அல்லது ''மொணராகலை'' என்பதை விண்ணப்பத்தில் A இல் தெளிவாக குறிப்பிடவும்.
- * தாங்கள் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலத்தையும் அதற்கு ஏற்புடைய இலக்கத்தையும் விண்ணப்பத்தில் B இல் தெளிவாக குறிப்பிடவும்.
- * முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு பெயரை ஆங்கில பெரிய எழுத்துக்களில் குறிப்பிடுக.
  *உதாரணம் :- PERERA A. B. C. (இங்கு Mr./ Mrs./ Miss ஆகியவற்றில் ஏற்புடையதாகாத சொற்களை வெட்டிவிவும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2016.05.25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு ''செயலாளர், ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, இல. 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்அராவை, பதுளை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பவும். விண்ணப்பங்கள் கிடைக்கபெற்றமை பற்றிய அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''ஊவா மாகாண இறைவரித் திணைக்களத்தின் வகுப்பு III தரம் II வரி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பம் கோரல் - 2016'' என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். தற்போது அரச/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பதவியிலுள்ள விண்ணப்பதாரிகள் தனது திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

7. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் /பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் ஒரு அதிகாரி/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் 230,700 ரூபா அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

8. **பரீட்சைக் கட்டணம் மற்றும் நிர்வாக செலவுகள்**.- பரீட்சைக் கட்டணம் மற்றும் நிர்வாக செலவு 400 ரூபா ஆகும். இந்த தொகையை ஊவா மாகாண பிரதம செயலாளரின் வருமானத் தலைப்பு 20.03.02.13 க்கு வரவு வைத்து ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் கட்டாயமானதாகும். எதிர்கால தேவைக்கு பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்களோ அல்லது காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எத்தகைய காரணத்தைக்கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்திற்கொள்க.

9. போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் ஏற்புடைய பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சையின்போது தேவையான தகைமைகளைப் பெற்றிருக்காதது தெரியவருமிடத்து அவர் நியமனம் வழங்குவதற்கு தகுதியற்றவராக கருதப்படுவார்.

10. திறந்த போட்டிப் பரீட்சை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவினால் நடாத்தப்படும். போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் முழுப் பரீட்சைக்கும் தனது விருப்பத்திற்கமைய ஒரு மொழிமூலம் மாத்திரமே தோற்ற முடியும். விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் ஊடகமொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

11. பரீட்சை நடைபெறும் தினத்தன்று விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகிய ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த ஆவணங்கள் தவிர்ந்த பிற எத்தகைய ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. **போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம்**.- இப்பரீட்சை ஒரு வினாப்பத்திரத்தைக் கொண்டுள்ளது. வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதலாம் பகுதியான நுண்ணறிவு வினாக்களுக்கு 30 நிமிடங்களில் விடையளித்து மீண்டும் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்தியின் பொது அறிவுத் திறனை பரீட்சிப்பதற்கான இரண்டாவது பகுதிக்கு எஞ்சிய ஒரு மணித்தியாலத்திற்குள் விடையளித்தல் வேண்டும்.

பொது அறிவு மற்றும் நுண்ணறிவுப் பரீட்சை - காலம் 1 1/2 மணித்தியாலம்

13. **பிழையான தகவல்களை வழங்குதல்**.- இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு எவரேனுமொரு பரீட்சார்த்திக்கு தகைமை இல்லையென தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறுகின்ற போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு

சந்தர்ப்பத்திலாயினும் அவரது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என்றோ அல்லது அறிந்துகொண்டே பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளார் என்றோ அல்லது சரியான தகவலொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என்றோ தெரியவருமாயின் அவரது சேவை முன் அறிவித்தல் ஏதுமின்றி முடிவுறுத்தப்படும்.

14. இந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்/ஆட்சேர்ப்பு செய்யாதிருத்தல் அல்லது நிலவும் வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றியோ அல்லது இது பற்றிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது. அவ்வாறே இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தும் /தீர்மானிக்கும் உரிமை ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது.

ஆர். எம். ரீ. பீ. ஹாதியல்தெனிய
செயலாளர்,
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
பதுளை,
2016, ஏப்பிறல் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஊவா மாகாண இறைவரித் திணைக்களத்தின் வகுப்பு III தரம் II வரி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பம் கோரல் - 2016**

Calling Application for Recruitment to the Post of Tax Officer- Class II of Grade III of Uva Provincial Revenue Department - 2016

[ ]
அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

A. தாங்கள் உள்ளடங்குகின்ற மாவட்டத்தை குறிப்பிடுக. [ | ]
(பதுளை - 01/மொணராகலை - 02)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடுக)

B. மொழி மூலம் (சிங்களம் - 01/தமிழ் - 02) [ | ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடுக)

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Rev./Mr./Mrs./Miss
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :-----.

02. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்) :-----.
2.3 தொலைபேசி இலக்கம் :-----.

03. 3.1 பால்நிலை : பெண் - 1/ஆண் - 0 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் குறிப்பிடுக)

3.2 பிறந்த திகதி : ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

3.3 2016.05.25 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

3.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | ]

04. 4.1 2016.05.25 ஆந் திகதிக்கு ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவுக்காலம் :
வருடம் [ | | | ] மாதம் [ | ] நாள் [ | ]
4.2 உரிய மாவட்டத்தில் எப்போதிருந்து வசிக்கின்றீர்கள்:-----.
4.3 வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு :-----.
4.4 வசிக்கும் கிராம அலுவலர் பிரிவு :-----.

05. கல்வித் தகைமைகள் :-

5.1 க.பொ.த. (சாதா/தரம்) பரீட்சை:-----.

1. வருடம் :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 5 | | |
| 2 | | | 6 | | |
| 3 | | | 7 | | |
| 4 | | | 8 | | |

5.2 க.பொ.த (உயர் /தரம்) பரீட்சை
1. வருடம் :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

5.3 பெற்றுக்கொண்டுள்ள பட்டம்/டிப்ளோமா அல்லது அதற்கு சமமான கணக்கியல் தகைமைகள் :-

| பட்டம்/டிப்ளோமா அல்லது அதற்கு சமமான கணக்கியல் தகைமைகள் | நிறுவனம் | செல்லுபடியாகும் திகதி | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

6. விண்ணப்பதாரி தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தொழில் புரிபவராயின் தொழில் புரியும் திணைக்களத்தின் பெயரும் முகவரியும் :-----.

7. பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரங்கள்: -

7.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் :-----.

7.2 பற்றுச்சீட்டு இலக்கமும் செலுத்திய திகதியும் :-----.

7.3 செலுத்திய தொகை :-----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடியது.) |

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

(i) இவ்விண்ணப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யப்படாமையினாலும் மற்றும் அல்லது பிழையாகப் பூர்த்திசெய்திருப்பதனால் ஏற்படும் பாதிப்பை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகிறேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ii) என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள இவ் உறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**:-

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற ...................................................................................... எனும் முகவரியில் வசிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் .......................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

10. **திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**: -

(தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

மேற்படி தகவல்களைக் கொண்ட திரு./திருமதி/செல்வி ................................................................................................ அமைச்சில்/ திணைக்களத்தில் /அலுவலகத்தில் ............................ ஆந் திகதி முதல் ............................ பதவியில் பணியாற்றி வருகிறார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எதிர்காலத்தில் அவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்படவில்லை என்றும், பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

திணைக்களத் தலைவரின் முழுப் பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

4-1026/2

## ஊவா மாகாண அரசாங்க சேவையின் மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பம் கோரல் - 2016

ஊவா மாகாண அரசாங்க சேவையில் மொழிபெயர்ப்பாளர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவுள்ள பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.05.25 ஆகும்.

**பதவிப்பெயர்.-** மொழிபெயர்ப்பாளர் - சிங்களம்/தமிழ்
மொழிபெயர்ப்பாளர் - சிங்களம்/ஆங்கிலம்

**ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம்.-** தரம் II

**சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்)** :- பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2016 இன் அட்டவணை இல. I க்கு அமைய MN 6-2006, ரூபா 36,585 - 10 × 660 - 11 × 755 - 15 × 930 - ரூபா 65,440 சம்பள அளவுத்திட்டம் ஆகும். அச்சுற்றுநிருபத்தின் அட்டவணை இல. II க்கு அமைய சம்பளம் வழங்கப்படும்.

**2. ஆட்சேர்ப்புக்குரிய பொதுத் தகைமைகள் :-**

(அ) விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) சகல விண்ணப்பதாரர்களும் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் போதிய உடல், உள ஆரோக்கியமுள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு ஆகக்குறைந்தது உடன் முன்னரான 3 வருடங்கள் தொடர்ச்சியாக ஊவா மாகாணத்தில் வதிவு உள்ளவராக இருத்தல் வேண்டும். பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நேர்முகப் பரீட்சையின் போது உரிய படிவத்தில் வதிவை உறுதிசெய்தல் வேண்டும்.

(ஈ) இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தேவையென இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(உ) **வயது.-** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**3. கல்வித் தகைமைகள்.-**

**3.1 சிங்களம்/தமிழ் மொழிபெயர்ப்பு**

(அ) க. பொ. த. (சா. தர) பரீட்சையில் அல்லது அதற்கு சமமான பரீட்சையொன்றில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம், சிங்களம்/தமிழ் மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

(ஆ) இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்) பாடத்திற்கு க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் அல்லது அதற்கு சமமான பரீட்சையொன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது அதற்கு மேலான ஒரு தகைமையைப் பெற்றிருத்தல்;

மற்றும்

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து தமிழ்மொழியை ஒரு பாடமாகக் கொண்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**3.2 சிங்களம்/ஆங்கிலம் மொழிபெயர்ப்பு**

(அ) க. பொ. த. (சா. தர) பரீட்சையில் அல்லது அதற்கு சமமான பரீட்சையொன்றில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் கணிதம், சிங்களம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

(ஆ) க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் அல்லது அதற்கு சமமான பரீட்சையொன்றில் ஆங்கில பாடத்திற்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது அதற்கு மேலான ஒரு தகைமையைப் பெற்றிருத்தல்;

மற்றும்

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஆங்கிலமொழியை ஒரு பாடமாகக் கொண்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**4. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.-**

(அ) இப்பதவி நிரந்தமானதும். ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/2004 பிரகாரம் உரிய மட்டத்தில் அரசகரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**5. ஆட்சேர்க்கும் முறை :**

ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். சகல தகைமைகளையும் கொண்டுள்ள பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறுகின்றவர்களில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கின் முன்னுரிமைக்கு ஏற்ப நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம் பின்வருமாறு.

5.1 போட்டிப்பரீட்சையின் பாடத்திட்டம்.- எழுத்துமூலப் பரீட்சை பின்வரும் பாடங்களுக்கு ஏற்புடைய வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| | பாடம் | காலம் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | மொழிபெயர்ப்பு தொடர்பான ஆற்றலை மதிப்பிடுதல் | 3 மணித்தியாலங்கள் | 100 |
| 2 | ஆங்கில மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| 3 | சிங்கள மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| 4 | தமிழ் மொழி | 1 1/2 மணித்தியாலம் | 100 |
| 5 | கிரகித்தல் மற்றும் பொது அறிவு | 1 மணித்தியாலம் | 100 |

1. **மொழிபெயர்ப்பு.-** அலுவலக ஆவணம் அல்லது அறிக்கை அல்லது செய்திப் பத்திரிகை விடயம் அல்லது அறிக்கை ஒன்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள் உட்பட உத்தியோகபூர்வமான விஞ்ஞான, சட்டத்துறை சார்ந்த தொழில்நுட்ப விடயங்கள் சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் இலக்கிய நூல்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கஷ்டமான பகுதிகள் கீழ்வரும் முறைகள் அதாவது (i) அல்லது (ii) ஆகிய ஏதேனும் ஒன்றிற்கு இணங்க மொழி பெயர்த்தல்.

(i) சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கும் தமிழ் மொழியிலிருந்து சிங்களத்துக்கும்

(ii) சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கும் ஆங்கில மொழியிலிருந்து சிங்களத்திற்கும்

2. **ஆங்கில மொழி.-** ஒரு கட்டுரை எழுதும் படியும், ஒரு பகுதியைச் சுருக்கி எழுதும் படியும், கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை சுருக்கி அவரது சொந்த மொழிநடையில் எழுதும்படியும், சொற்களின் கருத்துத் தெளிவாகும் வகையில் அச்சொற்களை கொண்டு வாக்கியங்கள் அமைக்கும்படியும், வாக்கியங்களில் உள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்தும்படியும், மரபுச் சொற்தொடர்களின் கருத்தை விளக்கும்படியும் பரீட்சார்த்தி கேட்கப்படுவார்.

3. **சிங்கள மொழி.-** ஒரு கட்டுரை எழுதும் படியும், ஒரு பகுதியைச் சுருக்கி எழுதும் படியும், கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை சுருக்கி அவரது சொந்த மொழிநடையில் எழுதும்படியும், சொற்களின் கருத்துத் தெளிவாகும் வகையில் அச்சொற்களை கொண்டு வாக்கியங்கள் அமைக்கும்படியும், வாக்கியங்களில் உள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்தும்படியும், மரபுச் சொற்தொடர்களின் கருத்தை விளக்கும்படியும் பரீட்சார்த்தி கேட்கப்படுவார்.

4. **தமிழ் மொழி.-** ஒரு கட்டுரை எழுதும் படியும், ஒரு பகுதியைச் சுருக்கி எழுதும் படியும், கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை சுருக்கி அவரது சொந்த மொழிநடையில் எழுதும்படியும், சொற்களின் கருத்துத் தெளிவாகும் வகையில் அச்சொற்களை கொண்டு வாக்கியங்கள் அமைக்கும்படியும், வாக்கியங்களில் உள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்தும்படியும், மரபுச் சொற்தொடர்களின் கருத்தை விளக்கும்படியும் பரீட்சார்த்தி கேட்கப்படுவார்.

**குறிப்பு.-** சிங்களம்/ஆங்கிலம்/தமிழ் மொழி ஆகிய வினாப்பத்திரங்களில் தான் விண்ணப்பிக்கும் பதவிக்கு ஏற்புடைய இரண்டு பாடங்களுக்கான வினாப் பத்திரங்களுக்கு பரீட்சார்த்திகள் தோற்றுதல் வேண்டும்.

5.2 கிரகித்தல் மற்றும் பொது அறிவு.- சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தயார் செய்யப்படும் கிரகித்தல் வினாப்பத்திரத்தின் பொருட்டு தாம் விரும்பும் ஒரு மொழியில் விடையளிக்க பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படும்.

அதன் பொருட்டு பகுதிகளின் தொகுப்பொன்று பரீட்சார்த்திக்கு கொடுக்கப்படும். சில பகுதிகள் சம்பந்தப்பட்ட வரையில் பரீட்சார்த்திக்கு மாற்றுக் கூற்றுக்களின் தொகுதியொன்று கொடுக்கப்படும். இவற்றுள் ஒன்று பகுதியின் உள்ளடக்கத்துடன் நன்கு பொருந்துவதாக இருக்கும். பொருத்தமான கூற்றைத் தேர்ந்தெடுக்கும்படி பரீட்சார்த்தி கேட்கப்படுவார்.

ஏனைய பகுதிகளைப் பற்றிய வகையில் பரீட்சார்த்தி பகுதியின் அர்த்தத்தை எவ்வளவு தூரம் விளங்கிக்கொள்கின்றார் என்பதை பரீட்சிப்பதற்கு ஏற்ப வினாக்கள் தயாரிக்கப்படும்.

**குறிப்பு**.-

* நியமனம் பெறுவதற்கு தகைமை பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாளுக்கும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளை அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
* தெளிவற்ற கையெழுத்துக்களுக்கும் சொற் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். வாசிக்க முடியாத கையெழுத்துடைய பரீட்சார்த்திகளின் தகைமை இரத்துச் செய்யப்படும்.

6. **விண்ணப்பிக்கும் முறை**:- இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 அளவிலான காகிதத்தில் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். 1 தொடக்கம் 5 வரையிலான தகவல்களை முதல் பக்கத்திலும் அதன் பின்னர் வரும் தகவல்களை இரண்டாம், மூன்றாம் பக்கங்களிலும் அமையுமாறு விண்ணப்பப்படிவத்தை தானே தயாரித்துக்கொள்ளல் வேண்டும். அந்தந்த தலைப்புக்களில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் தலைப்புக்கள் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2016.05.25 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கப்பெறுமாறு "செயலாளர், ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, இல. 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்அராவை, பதுளை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பவும். விண்ணப்பங்கள் கிடைக்கபெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஊவா மாகாண அரசாங்க சேவையின் மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கு விண்ணப்பம் கோரல் - 2016" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். தற்போது அரச/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதிய உரித்துடைய பதவியுள்ள விண்ணப்பதாரிகள் தனது திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

7. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் /பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் ஒரு அதிகாரி/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் 230,700 ரூபா அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

8. **பரீட்சை மற்றும் நிர்வாக செலவுகள்**.- பரீட்சைக் கட்டணம் மற்றும் நிர்வாக செலவு 400 ரூபா ஆகும். இந்த தொகையை ஊவா மாகாண பிரதம செயலாளரின் வருமானத் தலைப்பு 20.03.02.13 க்கு வரவு வைத்து ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் கட்டாயமானதாகும். எதிர்கால தேவைக்கு பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்களோ அல்லது காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எத்தகைய காரணத்தைக்கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்திற்கொள்க.

9. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர் என்ற முன் முடிவின் பிரகாரம் உரிய முறையில் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அவ்விண்ணப்பதாரர்களது சான்றிதழ்களைப் பரீட்சித்துப் பார்க்காமல் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் ஏற்புடைய பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சையின் போது தேவையான தகைமைகளைப் பெற்றிருக்காதது தெரியவருமிடத்து அவர் நியமனம் வழங்குவதற்கு தகுதியற்றவராக கருதப்படுவார்.

10. பரீட்சை நடைபெறும் தினத்தன்று விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ஆகிய ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த ஆவணங்கள் தவிர்ந்த பிற எத்தகைய ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

11. **பிழையான தகவல்கள் வழங்குதல்**.- இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு எவரேனுமொரு பரீட்சார்த்திக்கு தகைமை இல்லையென தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறுகின்ற போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலாயினும் அவரது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னராயினும்

விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என்றோ அல்லது அறிந்துகொண்டே பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளார் என்றோ அல்லது சரியான தகவலொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என்றோ தெரியவருமாயின் அவரது சேவை முன் அறிவித்தல் ஏதுமின்றி முடிவுறுத்தப்படும்.

12. இந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்/ஆட்சேர்ப்பு செய்யாதிருத்தல் அல்லது நிலவும் வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றியோ அல்லது இது பற்றிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது. அவ்வாறே இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தும் /தீர்மானிக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது.

ஆர். எம். ரீ. பீ. ஹாதியல்தெனிய
செயலாளர்,
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
பதுளை,
2016, ஏப்பிறல் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஊவா மாகாண சபை அரசாங்க சேவையின் மொழிபெயர்ப்பாளர் தரம் II பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2016**
Recruitment to the Post of Translator - Grade II in Uva Provincial Public Service - 2016

[ ]
அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

1. விண்ணப்பிக்கும் பதவி [ | ]
1. மொழிபெயர்ப்பாளர் - சிங்களம்/தமிழ்
2. மொழிபெயர்ப்பாளர் - சிங்களம்/ஆங்கிலம்

(ஏற்புடைய கூண்டினுள் பதவியையும் இலக்கத்தையும் குறிப்பிடுக.)

2. பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்
2.1 கிரகித்தல் மற்றும் பொது அறிவு வினாப்பத்திரத்திற்கு தோற்றும் மொழி மூலம் [ | ]
1 - சிங்களம்
2 - தமிழ்
3 - ஆங்கிலம்

2.2 விண்ணப்பிக்கும் பதவிக்கு அமைய இரு மொழிகளும் (மொழிமூலத்தையும் இலக்கத்தையும் ஏற்புடைய கூட்டில் எழுதுக) [ | ] [ | ]

3. 3.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : Rev./Mr./Mrs./Miss
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதாரணம் :- PERERA A. B. C.
3.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
3.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

4. 4.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
4.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்) :-----.
4.3 தொலைபேசி இலக்கம் :-----.
4.4 நிரந்தர வதிவு மாவட்டம் [ | ]
1 பதுளை
2 மொனராகலை
4.5 2016.05.25 ஆந் திகதிக்கு ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவுக்காலம்
வருடங்கள் [ | | | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

5. 5.1 பால்நிலை : பெண் - 1/ஆண் - 0 [ ]

5.2 பிறந்த திகதி : வருடம் [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

5.3 2016.05.25 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

5.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | ]

6. கல்வித்தகைமைகள் :-

6.1 பட்டம் பற்றிய விபரம் :

6.1.1 பட்டத்தின் பெயர் :----.

6.1.2 பல்கலைக்கழகம் :----.

6.1.3 பட்டம் செல்லுபடியாகும் திகதி :----.

6.1.4 கற்ற பாடங்கள் :----.

6.2 க. பொ. த. (சாதா/தரம்) பரீட்சை :-

1. வருடம் :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 5 | | |
| 2 | | | 6 | | |
| 3 | | | 7 | | |
| 4 | | | 8 | | |

6.3 விண்ணப்பிக்கும் பதவிக்கு அமைய க.பொ.த (சா /தரம்) பரீட்சையில் தாய்மொழி/இரண்டாம் மொழி தொடர்பான விபரங்கள்:-

1. வருடம் :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 தாய்மொழி | | |
| 2 இரண்டாம் மொழி (தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) | | |

6.4 விண்ணப்பிக்கும் பதவிக்கு அமைய க. பொ. த. (சா/தரம்) பரீட்சையில் தாய்மொழிக்கு/இரண்டாம் மொழிக்கு திறமைச் சித்தி இல்லாத போது அதற்கு சமமான அல்லது உயர் தகைமைகள் பற்றிய விபரம் :-

6.4.1 பாடம் (சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்) :----.

6.4.2 பாடநெறியின் பெயர் :----.

6.4.3 சான்றிதழ் வழங்கப்பட்ட நிறுவனம் :----.

6.4.5 சான்றிதழ் செல்லுபடியாகும் திகதி :----.

7. பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரங்கள்: -

7.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் :-----.

7.2 பற்றுச்சீட்டு இலக்கமும் செலுத்திய திகதியும் :-----.

7.3 செலுத்திய தொகை :-----.

| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடியது.) |
|---|

8. **விண்ணப்பதாரியின் உறுதியுரை** : -

(i) இவ்விண்ணப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யப்படாமையினாலும் மற்றும் அல்லது பிழையாகப் பூர்த்திசெய்தமையினாலும் ஏற்படும் பாதிப்பை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகிறேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் சரியாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகிறேன்.

(ii) என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள இத்தகவல்கள் பொய்யானவையென நிரூபிக்கப்பட்டால் மேற்படி என்னால் விண்ணப்பிக்கப்பட்டுள்ள பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்பதையும் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். அத்தோடு பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

9. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**:-

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற ...................................................................................... எனும் முகவரியில் வசிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் .......................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

10. **திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**: -

(தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

மேற்படி தகவல்களைக் கொண்ட திரு./திருமதி/செல்வி ................................................................................................ அமைச்சில்/திணைக்களத்தில் /அலுவலகத்தில் ........................... ஆந் திகதி முதல் ............................ நிரந்தர ஓய்வூதியப் பதவியில் பணியாற்றி வருகிறார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எதிர்காலத்தில் அவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்படவில்லை என்றும், பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)

திணைக்களத் தலைவரின் முழுப் பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

4-1026/3